# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 30, 2026

Weekly E-paper • May 30, 2026




# மண்டியிட்டு நிற்பதுதான் மாற்றமா?

சுப.வீரபாண்டியன்

## ஆர்எஸ்எஸ்! காங்கிரஸ்! மாணிக்கம் தாகூர்?

எழில்.இளங்கோவன்

## ‘மகஜர்’ கொடுத்தார் முதல்வர்

தலையங்கம்

## ‘மின்வெட்டு’: நீதிமன்றம் ஒத்திவைப்பு!

முனைவர் காந்தி பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 30, 2026

Weekly E-paper ●May 30, 2026


## மண்டியிட்டு நிற்பதுதான் மாற்றமா?

சுப.வீரபாண்டியன்

இன்று பொறுப்பு ஏற்றிருக்கும் புதிய தமிழ்நாடு அரசு, இருபெரும் மாநில உரிமைகளைக் கைவிட்டிருப்பது, மிகுந்த கவலைக்கு உரியதாக இருக்கிறது!



ஒன்று, அரசு நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடுவதற்கான உரிமையைத் தமிழ்நாட்டின் முதலமைச்சர், டெல்லியிடம் கையேந்தி கேட்டுக் கொண்டிருக்கிறார்! இன்னொன்று, பல்கலைக்கழகங்களில் வேந்தராக முதலமைச்சரே இருக்க வேண்டும் என்று போராடிப் பெற்ற உரிமையைத் தாமாக முன்வந்து உயர்கல்வி அமைச்சர் பறிகொடுக்கத் தயாராகி இருக்கிறார்!

இரண்டு மாநில உரிமைகளைத் தில்லியிடம் அடமானம் வைக்க, தமிழ்நாடு அரசு தாமே முன்வருவது அவமானத்தின் அடையாளம்!

எந்த ஓர் அரசு விழாவிலும் வந்தே மாதரம் பாடலைத்தான் முதலில் பாட வேண்டும் என்று சட்டத்தின் எந்தப் பிரிவும் சொல்லவில்லை. ஆளுநர் மாளிகையில் விழாக்கள் நடக்கும் போது எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று கூறுவதும் அடிப்படையில் தவறானது! ஆளுநர் மாளிகையும் தமிழ்நாட்டின் எல்லைக்குள் தான் இருக்கிறது! அதுவும் அரசு விழாதான்!

ஒரு ஜனநாயக நாட்டில், முதலமைச்சர், ஆளுநர் என்று இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது! ஆளுநர் பதவியே தேவையற்ற ஓர் அலங்காரப் பதவிதான் என்னும் போது, அங்கே கொண்டு போய் நமக்கிருக்கிற உரிமைகளைத் தாமாக அடமானம் வைப்பது, தமிழ் நாட்டு மக்களைத் திட்டமிட்டு அவமதிப்பதாக இருக்கிறது!

விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் ரவிக்குமார், உயர் கல்வி அமைச்சரின் கருத்து அவருடைய தனிப்பட்ட கருத்தா அல்லது தமிழ்நாடு அரசின் கருத்தா என்று கேட்டிருக்கிறார்! இது மிக முக்கியமான கேள்வி!

அரசாங்கத்தின் கொள்கை முடிவை, ஒரு தனி மனிதர், அவர் அமைச்சராகவே இருந்தாலும் கூட, எடுத்து விட முடியாது! எனவே இது அமைச்சரின் தனிப்பட்ட கருத்து என்றால் அது அத்துமீறல்! இல்லை, அரசாங்கத்தின் கருத்துதான் என்றால், அது அடிமைத்தனம்!

மாற்றம் வேண்டும், மாற்றம் வேண்டும் என்று தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த நண்பர்களே, இந்திய ஒன்றிய அரசின் முன், இரு கைகளையும் கட்டிக் கொண்டு நிற்பதுதான், நீங்கள் சொன்ன மாற்றமா என்பதை மக்களுக்குக் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்கள்!

ஒருவேளை, விஜய் அவர்கள் தலைமையிலான இன்றைய தமிழ்நாடு அரசு, தம் உரிமைகளை விட்டுக் கொடுக்க முன் வந்தாலும், தமிழ்நாட்டு மக்கள் ஒரு நாளும் அதனை ஏற்க மாட்டார்கள்!

●

மாற்றம் வேண்டும், மாற்றம் வேண்டும் என்று தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த நண்பர்களே, இந்திய ஒன்றிய அரசின் முன், இரு கைகளையும் கட்டிக் கொண்டு நிற்பதுதான், நீங்கள் சொன்ன மாற்றமா என்பதை மக்களுக்குக் கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்கள்!

# ஆர்எஸ்எஸ்! காங்கிரஸ்! மாணிக்கம் தாகூர்?

**எழில்.இளங்கோவன்**



அண்ணா அறிவாலயத்தில் 23-05-2026 அன்று திமுக இளைஞர் அணிபொறுப்பாளர்கள் கூட்டத்தில் பேசிய முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,

"பாஜகவின் தொடர் வெற்றிக்கு மோடியும் அமித்ஷாவும் தான் காரணமென நினைத்திருந்தேன். ஆனால், அதற்கு முதன்மையான காரணம் காங்கிரஸ்." என்று பேசியிருந்தார். தலைவர் ஸ்டாலின் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப் 'போலி மதச்சார்பின்மை' என்று சொல்லியிருந்தார்.

இவர்களின் இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலைச் சொல்லாமல், திமுக, அதிமுக, பாஜக கூட்டுசேர்ந்து நடிகர் விஜயை ஆட்சி அமைக்க விடாமல் தடுக்க முயற்சி செய்தார்களாம், அதனால் காங்கிரஸ் தவெகவுக்கு முட்டுகொடுத்து இவர்கள் மந்திரிகள் ஆகிவிட்டார்களாம், சொல்கிறார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணிக்கம் தாகூர்.

தலைவர் ஸ்டாலின் சொன்னதுபோல காங்கிரஸ் ஒரு 'போலி மதச்சார்பின்மை' என்பதை மாணிக்கம் தாகூர் ஏற்றுக்கொள்கிறாரா, இல்லையா?

நேரு அமைச்சரவையில் இந்தியாவின் முதல் துணைப் பிரதமரும், உள்துறை அமைச்சருமாக பதவிவகித்த காங்கிரஸ் தலைவர் வல்லாய் பட்டேல், 1948 செப்டம்பர் 11ஆம் நாளிட்ட கடிதத்தில், ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கருக்கு இப்படி எழுதுகிறர் :

"காங்கிரசில் சேர்வதன் மூலமே ஆர்எஸ்எஸ் காரர்கள் தங்களின் தேசபக்தி முயற்சிகளை மேற்கொள்ள முடியுமே ஒழிய, தனியாக இருப்பதன் மூலமும், காங்கிரசை எதிர்ப்பதன் மூலமும் அல்ல...", மதச்சார்பின்மை பேசும் மாணிக்கம் தாகூரால் இதை மறுக்க முடியுமா?

நேரு அவர்கள் வெளிநாட்டுப் பயணம் சென்றிருந்தபோது, 1949 ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் நாள் காங்கிரஸ் கட்சியின் காரியக்கமிட்டி கூடி, 'ஆர்எஸ்எஸ் அமைப்பின் உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்பினர்களாகச் சேரலாம்' என்று தீர்மானம் இயற்றினார்களா, இல்லையா ?

காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளராக சி.என்.ஸ்டீபன் 1983இல் அறிவித்தார் : 'காங்கிரஸ் பண்பாடும், இந்து பண்பாடும் ஒத்த தன்மையுடன்தான் செயல்படுகின்றன'. அன்றைய காங்கிரஸ் தலைவர் இந்திரா காங்கி அதை மறுக்கவில்லை. மாறாகத் தம்மை ஓர் உண்மையான இந்துவாகக் காட்டிக்கொள்ள எல்லா முயற்சிகளையும் செய்தார். உதாரணமாக 1983 நவம்பர் 11ஆம் தேதியன்று குருச்சேத்திரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் சிறுபான்மை மதத்தினர் (முஸ்லிம்கள்) தாங்கள் பிறந்த மண்ணிற்கு ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி அவர்களுக்கு நினைவூட்டினார்.

காஷ்மீரைப் பற்றிக் குறிப்பிடுகையில் மற்றொரு தர்மயுத்தத்திற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகக் குறிப்பிட்டார். அதற்குச் சிலநாள்களுக்கு முன் ஆரியசமாஜம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய இந்திரா, 'நமது மதமும், நமது மரபும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன' என்றார்.

(இந்து இந்தி இந்தியா: எஸ்.வி.ராஜதுரை, பக்: 41).

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘மகஜர்’ கொடுத்தார் முதல்வர்

டில்லிக்குத் தனி விமானத்தில் பறந்தார் முதல்வர் விஜய். மறுநாள் தமிழ்நாட்டுக்குப் பறந்து வந்துவிட்டார் அவர்.

டில்லியில் அவர் பிரதமரையும், நிதியமைச்சரையும் சந்தித்ததாகத் தொலைக் காட்சியில் செய்திகள் வந்தன.

அங்கு என்ன நடந்தது? என்ன பேசப்பட்டது? விஜயின் கோரிக்கைகள் என்ன? அவை ஏற்கப்பட்டதா? என்பது குறித்து அவர் செய்தியாளர்களைச் சந்தித்து ஒன்றும் சொல்லவில்லை டில்லியில். செய்தியாளர்களைப் பார்த்தாலே மோடியைப் போல ஏன் ஓடி ஒளிகிறார் அவர்.

நாளை சட்டமன்றம் கூடும்போது பேசவேண்டும், எதிர்கட்சியினர் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும், விவாதங்களில் பங்குகொள்ள வேண்டும். அங்கெல்லாம் சினிமா பாணி 'ஸ்கிரிப்ட்' வைத்து நடிப்பதெல்லாம், செல்லுபடியாகாது. முதல்வராக ஆகிவிட்டால் போதாது. நிழல் முதல்வராக இல்லாமல் நிஜ முதல்வராகச் செயல்பட வேண்டும்.

அடுத்ததாக, டில்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல்காந்தி, கார்கேவைச் சந்திப்பதாகப் போட்டிருந்த திட்டம் என்ன ஆனது? உற்றுளி உதவி, தோழமை பாராட்டிய திமுகழகத் தலைவர் ஸ்டாலின் அவர்களையே நன்றிகெட்டுத்தூக்கி எறிந்த கட்சி காங்கிரஸ்.

தவெக ஆட்சிக்கு ஓடிப்போய் முட்டுகொடுத்த அதே காங்கிரஸ் விஜய்யால் தூக்கி எறியப்பட்டு, ராகுல் உள்பட யாரையும் பார்க்காமல், சொல்லாமலே ஓடிவந்துவிட்டார். கேரளாவில் காங்கிரஸ் அமைச்சரவைப் பதவியேற்பு விழாவையும் புறக்கணித்தார் விஜய் என்பது கவனிக்கத் தக்கது.

ஒன்றிய அரசின் ஏஜென்ட்டாக இருந்த ஆளுநர் ரவி தேசிய கீதத்தை முதலில் பாடச் சொல்லியும் கூட, அதைப் புறக்கணித்து தமிழ்த்தாய்ப் பாடலை முதலில் பாடச் செய்தார் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இன்றைய முதல்வர் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடவேண்டும் என மோடியிடம் 'மகஜர்' கொடுக்கிறார்.

தாமரையின் எஜமான விசுவாசத்தை டில்லில் வைக்கவேண்டும், தமிழ்நாட்டில் அரசியல்வாதியாக, முதல்வராகச் செயல்பட வேண்டும் விஜய்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

இந்திராகாந்தி மறைவுக்குப்பின் பிரதமர் பதவிக்கு வந்த ராஜீவ் காந்தியும் ஆர்.எஸ்.எஸ்ஸைத் 'தாஜா' செய்துவந்தார். 1989 இல் நடந்த பொதுத் தேர்தலில் ராஜீவ் காங்கிரசை ஆதரித்து வேலை செய்தது ஆர்எஸ்எஸ் என்பது நினைவிருக்கலாம். ராஜீவ் ஆட்சியைக் குறித்து ஆர்எஸ்எஸ் பிரமுகர் சுவாமி சின்மையானந்தா 1985 மே 18 இல் சென்னையில் கூறியதாவது : 'முப்பது ஆண்டுகளாக நிலைநிறுத்தப்பட்டு வந்த போலி மதச்சார்பின்மை என்ற மரபு மத்திய அரசாங்கத்தில் புதிய ஆட்சி வந்துள்ளதால் முறிக்கப்பட்டுள்ளது'. (அதே நூல்: 50)

ஏதோ காங்கிரஸ் தான் மதச்சார்பின்மையைப் பின்பற்றுகிறது, திமுக - பாஜகவுடன் ரகசிய உறவில் இருக்கிறது என்று பிதற்றிக் கொண்டு இருக்கும் மாணிக்கம் தாகூர், கடந்தகால அவரின் காங்கிரஸ் கட்சி ஆர்எஸ்எஸ் உடன் எப்படி உறவாடியது என்ற வரலாறைத் தெரிந்துகொண்டு பேசவேண்டும்.

நேருவின் ஆட்சிக் காலத்தில் இந்தி திணிப்புக்குக் கால்கோல் நடப்பட்டது. 2010ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர்

குலாம் நபி ஆசாத்தால் நீட் நுழைவுத் தேர்வு திட்டம் முன்மொழியப்பட்டது. இவை பாஜகவின் கொள்கைத் திட்டம் என்பதை மாணிக்கம் தாகூர் மறந்துவிடக் கூடாது.

காங்கிரசில் காந்தியடிகள், ஜவகர்லால் நேரு இருவரால் மட்டுமே மதச்சார்பின்மை பேசப்பட்டதே ஒழிய, அடிப்படையில் காங்கிரஸ் என்பது ஒரு மறைமுகமான ஆர்எஸ்எஸ் தான். ●

# 'மின்வெட்டு': நீதிமன்றம் ஒத்திவைப்பு!

முனைவர் காந்தி பாபு

*(இடம் :நீதிமன்றம். முன்னிலை: நீதியரசர். கூண்டில்: போராட்டத் தில் ஈடுபட்ட சாமானிய மக்கள் சார்பாக ஒரு வாலிபன்)*

**நீதியரசர்:** *(சுத்தியலால் மேஜையைத் தட்டி) அமைதி! அமைதி! நள்ளிரவு என்றும் பாராமல், பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து, சாலையிலே அமர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக முழக்கமிட்டதாக உங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது! இதற்கு உங்கள் பதில் என்ன?*

**வாலிபன்:** *(கூண்டின் கம்பிகளைப் பிடித்தபடி) நீதியரசர அவர்களே!*

*சட்டத்தை மீறினோம் என்பது சாட்டப்பட்டக் குற்றம்! ஆனால், அந்தச் சட்டத்தைப் படைத்த மனிதன், இங்கே வாழ முடியாமல் தவிக்கிறான் என்பதுதான் நிதர்சனமான உண்மை!*

*போக்குவரத்துக்கு இடையூறு செய்தோம் என்கிறார்களே... பகலெல்லாம் உழைத்துக் களைத்த உடம்போடு, இரவில் ஒரு சொட்டுத் தூக்கத்திற்காகக் ஏங்கித் தவிக்கும் எங்களுக்கு, இந்த வாழ்க்கையே பெரும் இடையூறாக மாறிவிட்டதை இந்த அரசு ஏனோ கவனிக்கத் தவறிவிட்டது!*

**வழக்கறிஞர்:** *(குறுக்கிட்டு) யுவர் ஆனர், குற்றம் சாட்டப்பட்டவர் தத்துவப் பேசி நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கிறார்!*

**வாலிபன்:** *(உரத்த குரலில்)*

*இது தத்துவமல்ல தர்மத்தின் குரல்!*

*விளக்குகள் எரியும் இந்த நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கும் உங்களுக்கு, இருளின் கொடுமை தெரியாது!*

*"தூக்கமில்லை... தூக்கமில்லை..." என்று நாங்கள் கத்தினோமே, அது ஏதோ ஆடம்பர உல்லாசத்திற்கான கூக்குரல் அல்ல!*

*பச்சை மண்ணாய், தொட்டிலிலே கிடக்கும் பச்சிளம் குழந்தைகளுக்குத் தூக்கமில்லை!*

*நாளை நாட்டின் தூண்களாய் மாறவிருக்கும் மாணவக் கண்மணிகளுக்குத் தூக்கமில்லை!*

*விடிய விடிய வியர்வை சிந்தி, இந்த தேசத்தின் பசியைத் தீர்க்கும் உழைக்கும் வர்க்கத்திற்குத் தூக்கமில்லை!*

**நீதியரசர்:** *அதற்காக நள்ளிரவில் சாலையில் இறங்கிப் போராடுவதா? சட்டத்தைக் கையில் எடுக்க உங்களுக்கு யார் உரிமை தந்தது?*

**வாலிபன்:** *(உணர்ச்சிப் பெருக்கோடு)*

*வயிற்றுக்குச் சோறிடாத சட்டம், வாழும் உரிமை தராத சட்டம்... எங்களை இருட்டில் தள்ளி வேடிக்கை பார்க்கும்போது, எங்கள் கைகள் என்ன செய்யும் நீதியரசரே?*

*"கரண்ட் வேண்டும்... கரண்ட் வரும் வரை போராடுவோம்" என்று நாங்கள் முழங்கியது, ஏதோ இந்த அரசாங்கத்திடம் பிச்சை கேட்பதற்கல்ல! நாங்கள் கட்டிய வரிப் பணத்திற்கான உரிமை அது!*

*பகலெல்லாம் வெயிலின் கொடுமை! இரவிலோ மின்சாரப் பற்றாக்குறையின் கொடுமை! கொசுக்களின் கடியிலும், உஷ்ணத்தின் தகிப்பிலும் எங்கள் வீட்டுப் பிள்ளைகள் அழும்போது, எந்த ஒரு தகப்பனால் வீட்டில் நிம்மதியாகப் படுத்துறங்க முடியும்?*

*வீதியிலே மின்சாரம் இல்லை... ஆனால் எங்கள் நெஞ்சிலே புரட்சித் தீ இருக்கிறது! அந்தத் தீயின் வெளிச்சத்தில்தான் நாங்கள் நேற்று வீதியில் இறங்கினோம்!*

**நீதியரசர்:** *(சற்றே யோசித்து) சட்டம் தன் கடமையைச் செய்யும். உங்கள் கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும், போராட்ட வடிவம்...*

**வாலிபன்:** *(இடையில் புகுந்து)*

*போராட்ட வடிவத்தைப் பார்க்காதீர்கள் நீதியரசரே, அதன் பின்னாலுள்ள வலியைப் பாருங்கள்!*

*மக்களுக்கு மின்சாரம் வழங்குவது அரசாங்கத்தின் கடமை என்றால், அந்தக் கடமையை நினைவூட்டுவது குடிமகனின் உரிமை!*

*பிள்ளைகளின் அழுகுரலை நிறுத்தவும், உழைக்கும் மக்களின் ஓய்வை மீட்டெடுக்கவும், இருளை விரட்டி ஒளியைக் கொண்டுவரவும் நாங்கள் போராடினோம்! இது குற்றமென்றால்... ஆம், நாங்கள் குற்றவாளிகளே!*

*எங்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு முன், மக்களுக்குத் தடையற்ற மின்சாரம் வழங்கத் தவறிய இந்த அரசாங்கத்திற்கு என்ன தண்டனை வழங்கப் போகிறீர்கள்?*

*இருளைத் தந்துவிட்டு வெளிச்சத்தைக் கேட்கும் இந்தச் சமுதாயத்தில், ஒளிரும் மின்சாரத்தைக் கேட்பது குற்றமல்ல... அது எங்கள் உயிர் மூச்சு!*

*"கரண்ட் வேண்டும்... கரண்ட் வரும் வரை எங்கள் போராட்டம் ஓயாது!" இது நீதிமன்றத்திற்கு நாங்கள் விடுக்கும் சவாலல்ல, இந்த நாட்டின் சாமானியனின் நியாயமானக் கோரிக்கை!*

*(நீதிமன்றமே ஒரு நிமிடம் ஸ்தம்பித்துப் போகிறது. நீதியரசர் தீர்ப்பை ஒத்திவைக்கிறார்!)*

•

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian